# அத்வைத வேதாந்தமும், தேரவாத பௌத்தமும் குறிப்பிடும் இறுதி இலக்கு - ஓர் ஒப்பீட்டாய்வு

**இ. சகாயசீலன்**

ஒப்பீட்டுச்சமயமும் சமூக நல்லுறவும் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
rsahayaseelan@yahoo.com

**சுருக்கம்:** மெய்யியல் தொடர்பான ஆராய்ச்சியில் மனிதவாழ்வின் இறுதி இலக்குத்தொடர்பான ஆராய்வும் மிக முக்கியமானதாகும். அந்த வகையில் எல்லா இந்திய முறைமைகளும் அறிவொளி அல்லது விடுதலை எனும் ஒரே விதமான தோற்றப்பாட்டையே சுட்டிநிற்கின்றன. அந்த விடுதலையானது வெவ்வேறு முறைகளில், வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. அது நிர்வாணம், மோட்சம், வீடுபேறு, சுதந்திரம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன. இவை வெவ்வேறு வழிகளில் விளக்கப்படுகின்றன. இவ்வாறு வெவ்வேறு வழிகளில் விளக்கப்பட்டிருப்பினும், விடுதலை எனும் விடயத்தில் பெரும்பாலும் ஒருமைப்பாடுகள் காணப்படுகின்றன. மிக முக்கியமான விடயம் என்னவெனில், விடுதலை என்பதைப் புலமை சார்ந்த வகையில் கிரகித்துக்கொள்ளமுடியாது என்பதாகும். எண்ணக்கரு ரீதியாக இதனை விளங்கிக் கொள்ளவோ, அடையவோ முடியாது. விடுதலையடையும் அனுபவமானது ஏனைய அம்சங்களைப்போல் பரிசிலிக்க முடியாதவையாகக் காணப்படும் அதேவேளை, இறுதியில் விடுதலையானது இறுதி நோக்கத்தினைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. பிரதான சமயங்களாக இந்துசமயம், கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் போன்றன காணப்படுகின்றன. இவை மனித வாழ்வின் இறுதி இலக்குப் பற்றியும் குறிப்பிடத்தவறவில்லை. இச்சமயங்கள் ஒவ்வொன்றிலும் பல்வேறு தத்துவப்பிரிவுகள் காணப்படுகின்றன. அந்த வகையில் இந்துசமயத்தில் அத்வைத வேதாந்தமும், பௌத்தத்தில் தேரவாத பௌத்தமும் குறிப்பிடும் மனிதவாழ்வின் இறுதி இலக்குப்பற்றி இங்கு ஆராயப்படுகின்றது. இந்து சமயத்தில் காணப்படும் பல்வேறு தத்துவப்பிரிவுகளைக் காட்டிலும், அத்வைத வேதாந்தம் தொடர்பான பார்வை அறிஞர்கள் மத்தியில் கூடுதலான கவனத்தைப் பெற்றுள்ளதாலும், பௌத்தத்தில் ஏனைய பிரிவுகளைக் காட்டிலும் தேரவாத பௌத்தம் புத்தரது கொள்கைகளையும், கோட்பாடுகளையும் இறுக்கமாகக் கடைப்பிடிப்பதாலும் அத்வைத வேதாந்தமும், தேரவாத பௌத்தமும் ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தியச் சிந்தனை மரபிற் தோன்றி இறையிருப்பை அங்கீகரித்துப் பேசுகின்ற அத்வைத வேதாந்தம் குறிப்பிடும் இறுதி இலக்குப் பற்றிய கருத்துக்களையும், இறையிருப்பை மறுப்பதனூடாகத் தத்துவக்கருத்துக்களை முன்வைக்கும் தேரவாத பௌத்தம் குறிப்பிடும் இறுதி இலக்குத் தொடர்பான கருத்துக்களையும் ஒப்பிட்டாராய்ந்து அவற்றுக்கிடையிலே காணப்படும் ஒன்றுபட்ட தன்மைகளையும், வேறுபாடான தன்மைகளையும் கண்டறிவது ஆய்வுக்குரிய பிரச்சினையாகும். இந்திய சமுதாயத்தின் சில அடிப்படைத் தத்துவங்களையும், சிந்தனைகளையும் இவ்விரு தத்துவப் பிரிவுகளும் ஏற்றுக்கொள்கின்றன. இவை சில அம்சங்களில் வேறுபடுகின்றன. இவற்றை மனதிற் கொண்டு அத்வைத வேதாந்தமும் தேரவாத பௌத்தமும் குறிப்பிடும் மனித வாழ்வின் இறுதி இலக்கு பற்றிச் சொல்லப்படும் கருத்துக்களைத் தத்துவார்த்த அடிப்படையில் ஒப்பிட்டு ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். அத்வைத வேதாந்தம், தேரவாத பௌத்தம் போன்றவற்றில் கூறப்படும் இறுதி இலக்குத்தொடர்பாக எழுத்துவடிவில் வெளிவந்த நூல்களில் உள்ள தகவல்களை ஒப்பிட்டு, வரலாற்றுப் பகுப்பாய்வு, விவரணப்பகுப்பாய்வு போன்ற முறைகளில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படும். இவ்விரு தத்துவப்பிரிவுகளும் வினைப்பயன், கர்மக்கோட்பாடு, மறுபிறப்பு என்பன பற்றிய கோட்பாடுகளை ஒப்புக்கொள்கின்றன. பிறவி என்பது வினைப்பயனுக்கேற்ப மீண்டும் மீண்டும் இடையறாது நிகழ்வது. அது துன்பம் கலந்தது. பிறிவியிலிருந்து விடுபடுவதே மனித வாழ்வின் இறுதி இலக்காகும். அது துன்பம் நீங்கிய நிலை, பூரணமான ஆனந்த நிலை. அத்வைத வேதாந்தமும், தேரவாத பௌத்தமும் குறிப்பிடும் மனித வாழ்வின் இறுதி இலக்கினை இனம் கண்டு அவற்றுக்கிடையே காணப்படுகின்ற ஒற்றுமைத் தன்மை இவ்வாய்வின் மூலம் வெளிக்கொணரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.